பொது நிருவாகச் சுற்றறிக்கை இல: 358

பொது நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07.
11... டிசம்பர். 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும், அரசாங்கக்
கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

1985 எப்பிரல் 12ஆம் திகதிக்கும் 1985 எப்பிரல் 30ஆம்திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக சொத்துச் சேதத்திற்கு அல்லது அசைவுடைச் சொத்து இழப்புக்கு அல்லது இரண்டுக்கும் ஆளான அரசாங்க உத்தியோகத்தர், அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளர் ஆகியோர்க்கு சம்பள முற்பணம் வழங்குதல்.

ஓர் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணியாளராகி, அவரும் அவரது வாழ்க்கைத் துணை இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாக அல்லது இருவரும் அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணி செய்வோராகவும் அல்லது வாழ்க்கைத் துணையில் ஒருவர் அரசாங்க உத்தியோகத்தராகவும் மற்றவர் அரசாங்கக் கூட்டுத்தாபனப் பணிசெய்பவராகவும் இருக்குமிடத்து அத்தகைய வாழ்க்கைத் துணை ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக 1985 எப்பிரல் 12ஆம் திகதிக்கும் 1985 எப்பிரல் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ( இருதேதியுமுள்ளிட்ட) காலப்பகுதியில் சொத்து அழிவு / அல்லது அசைவுள்ள சொத்து இழப்பு அல்லது இரண்டும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் காரணமாக ஏற்பட்டிருக்குமிடத்து அவர்களுக்கு 1985 நவம்பர் 22ஆம் திகதியிட்ட 313ஆம் இல. பொது நிருவாகச் சுற்றறிக்கையின் கீழான நியதிகளிலும் நிபந்தனைகளிலும் விதிக்கப்பட்டவாறு வேதனமுற்பணக் கொடுப்பளவு வழங்கப்படலாம்.

02. இவ்வேதன முற்பணங்களுக்கான விண்ணப்பங்கள் குறிப்பிட்ட படிவங்களில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு 1987.02.16ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். 1984 இன் 237 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவம் இத்தேவைக்கென உபயோகப்படுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ டி.பீ.ஜ.பி.எஸ். சிறிவர்த்தன
செயலாளர்,
பொது நிருவாக அமைச்சு.